# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
## NAGAPATTINAM.

**C.C. 01/2018 P.W. 15**

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. பாலமுருகன் | Father's Name . | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 27.04.2022 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 27.04.2022

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது தூத்துக்குடியில் போக்குவரத்து காவல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 4.3.2016 ம் தேதி தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது தூத்துக்குடி நகர உட்கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் அலுவலக சி.எண்.165/ஜிடிபி(சி)/STO/தூத்துக்குடி டவுன்/2016 ன்கீழ் பெறப்பட்ட புகாரை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப தெற்கு காவல் நிலைய கு.எண்.380/2016 சட்ட பிரிவு 363 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு பின்பு முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகார் மனுவையும் இணைத்து தூத்துக்குடி நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பிற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்குஅனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தேன். ஆய்வாளர் என்னை இது சம்மந்தமாக விசாரித்தார்கள். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். அது அதசாஆ.7 ஆகும்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து இந்த புகார் மனுவானது எங்கள் காவல் நிலைய ஆய்வாளருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டி

அனுப்பிவைக்கப்பட்டது. இந்த புகார் மனு வரப்பட்டது சம்மந்தமாக ஆய்வாளருக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு அனுமதிப்பெற்று நிலையப்பொறுப்பில் இருந்ததால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட தினத்தில் காவல் நிலையத்தில் பணியில்தான் இருந்தார். அந்த ஆய்வாளர் பெயர் சுரேஷ்குமார் ஆகும். அது சம்மந்தமாக என்னிடம் ஆய்வாளர் சுரேஷ்குமார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். காவல் நிலையத்தில் வைத்துதான் வாக்குமூலம் பதிவு செய்தார். தேதி ஞாபகம் இல்லை. அந்த வாக்குமூலத்தில் அனுமதிப்பெற்று முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாக குறிப்பிட்டு ஆய்வாளரிடம் விசாரணையின்போது சொல்லவில்லை. உண்மையில் அனுமதிப்பெற்று பதிவு செய்திருந்தால் அதை நான் வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையின் நகலை புகார்தாரருக்கு கொடுக்கவில்லை என்றால் நடவடிக்கைக்காக கரண்ட் பேப்பராக வந்ததால் கொடுக்கவில்லை. கரண்ட் பேப்பராக வந்தாலும் புகார்தாரருக்கு நகல் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை சம்பவ நாள் 11.2.2016 என்றும் பதிவு செய்த நாள் 4.3.2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலதாமதத்திற்கு காரணம் எதுவும் புகார் மனுவில் சொல்லப்படவில்லை. சம்பவம் உண்மையாக இருந்தால் புகார்தாரர் மனுவிலேயே காலதாமத்திற்கு காரணம் சொல்லியிருப்பார் என்றும் புகார் உண்மையில்லை என்பதால்தான் காலதாமதத்திற்கான காரணம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. புகார் மனு முதல் தகவல் அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள தட்டச்சு நகல்தான். சம்பவம் நடந்தாக கூறப்படும் இடம் வேளாங்கண்ணி என்ற நிலையில் தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்தில் இந்த சம்பவத்திற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல. அதிகாரவரம்பு இல்லாமல் பொய் புகாரின்பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**